# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **முகப்புரை**


**காப்புரிமை**

*தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.*

*எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.*


**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# முகப்புரை

## முகப்புரை

முகப்புரை என்பது இயற்றப்பட்ட சட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் பகுதியாகும். முதன் முதலில் முகப்புரையை அரசியலமைப்பில் வழங்கிய நாடு அமெரிக்கா. அதனைத் தொடர்ந்து இந்தியா மற்றும் பல நாடுகள் வழங்கியன.


ஜவஹர்லால் நேரு

- பண்டித ஜவஹர்லால் நேரு டிசம்பர் 13, 1946-ல் இந்திய அரசியல் நிர்ணய சபையில் குறிக்கோள்கள் பற்றிய தீர்மானம் முன்மொழியப்பட்டு, ஜனவரி 22, 1947-ல் அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்பு இது இந்திய அரசியலமைப்பின் முகப்புரையாக மாற்றப்பட்டது.
- இந்திய அரசியலமைப்புக்கு முகப்புரை வேண்டும் என்று கூறியவர் – ஜவஹர்லால் நேரு. ‘மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய்’ என்று இந்திய அரசியலமைப்பின் முகப்புரை கூறுகிறது.
- இந்தியா ஒரு இறையாண்மை உடைய சமதர்ம, மதச்சார்பற்ற, மக்களாட்சி மற்றும் குடியரசு நாடாக உள்ளது.
- நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை நமது நோக்கங்கள் எனவும் அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை கூறுகிறது. இந்திய அரசியலமைப்பின் முகப்புரை “இந்திய அரசியலமைப்பின் ஆன்மா” என்று கூறியவர் **தாகூர்தாஸ் பார்கவ்**.
- அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட போதே முகவுரையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் நோக்கம், மற்றும் குறிக்கோள்கள் இதில் குறிக்கப்பட்டுள்ளன. ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் நவம்பர் 26, 1949.
- இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில் உள்ள சமத்துவம், சுதந்திரம் போன்ற வார்த்தைகள் பிரெஞ்சு புரட்சியின் வழியாகச் சேர்க்கப்பட்டது. அரசியலமைப்பின்படி இந்தியா ஒரு இறையாண்மை பெற்ற மக்களாட்சிக் குடியரசு எனவும், சமதர்ம நெறி சார்ந்த, மதச்சார்பற்ற குடியரசு எனவும் கூறுகறது.
- கேசவானந்த பாரதி – கேரளா அரசை எதிர்த்து தொடங்கிய வழக்கில் (1973) முன்னுரை “அரசியல் அமைப்பின் ஒரு பகுதியே” என்று உச்சநீதிமன்றம் கூறியது.
- இறையாண்மை கொண்ட சமதர்ம, சமயச்சார்பற்ற மக்களாட்சிக் குடியரசை அமைத்திட உறுதிபூண்ட இந்திய மக்களாகிய நாம், அனைத்துக் குடிமக்களும் சமூக, பொருளாதார அரசியல் நீதி, பொருளாதார, அரசியல் நீதி எண்ணத்தில், வெளிப்படுத்தலில், நம்பிக்கையில் பற்றுறுதியில், வழிபடுதலில் சுதந்திரம் தகுதிநிலையிலும் வாய்ப்புரிமையிலும் சமநிலை பெறவும் அதை

அவர்கள் யாவரிடத்தும் மேம்படுத்தவும் தனிநபர் கண்ணியம் மற்றும் நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு கொண்ட சகோதரத்துவம் பெற்றிட உறுதி செய்து, இந்த 1949–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் நாள், நமது அரசியலமைப்பு அவையில் இந்த அரசியலமைப்புச் சட்டத்தை இங்கு ஏற்று, இயற்றி நமக்கு வழங்குகிறோம்.



THE CONSTITUTION OF INDIA

Preamble.

இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு இறையாண்மை மிக்க, சமதர்மம் சார்ந்த, மதச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவருக்கும்

சமூக, பொருளாதார, அரசியல் நீதி **(JUSTICE)** கிடைக்கவும்

சிந்தனையில் சிந்தனையை வெளிப்படுத்துவதில், நம்பிக்கையில், பற்றுறுதியில் மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும் **(LIBERTY),**

தகுதிநிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவம் **(EQUALITY)** உறுதியாக அனைவருக்கும் கிடைக்கச் செய்யவும், தனி ஒருவரின் மாண்புக்கும்,

சகோதரத்துவத்தை **(FRATERNITY)** அனைவரிடத்தில் வளர்க்கவும், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் வகையில்,

விழுமிய முறைமையுடன் உறுதி பூண்டு, ***1949*** நவம்பர் ***26***-ம் நாளாகிய இன்று நம்முடைய அரசியலமைப்பு நிர்ணய சபையில், ஈங்கிதனால், இவ்வரசியலமைப்பை ஏற்றுச் சட்டமாக இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

**இறையாண்மை**

- உள்நாட்டு விவகாரங்களிலும், வெளி விவகாரங்களிலும் முடிவெடுக்கக்கூடிய மேலான உரிமை மக்களிடம் மட்டுமே இருக்கிறது. எந்த வெளிப்புற அதிகார அமைப்பும் இந்திய அரசாங்கத்திற்கு ஆணையிடும் அதிகாரம் கிடையாது.

**சமதர்மம்**

- மக்களுக்குத் தேவைப்படும் வளங்களை மக்களே உருவாக்கவும், அவற்றைச் சமமாகப் பகிரவும் சமுதாயத்தில் உள்ள உரிமையாகும். அரசாங்கமானது நிலம் மற்றும் தொழில் சார்ந்த உரிமையை ஒழுங்குமுறைப்படுத்திச் சமூகப் பொருளாதாரச் சமத்துவமின்மையைக் குறைக்கிறது.

**மதச்சார்பின்மை**

- எந்த மதத்தை வேண்டுமென்றாலும் பின்பற்றக்கூடிய முழுமையான சுதந்திரம் குடிமக்களுக்கு உண்டு. ஆனால் அலுவல் மதம் என்று ஒன்று இல்லை. அரசாங்கம் அனைத்து மதங்களின் நம்பிக்கைகளையும், சம்பிரதாயங்களையும் சமமான மரியாதையுடன் பாவிக்கும் தன்மை படைத்தது.

**மக்களாட்சி**

- இவ்வகை அரசாங்கத்தில் மக்கள் சமமான அரசியல் உரிமைகளை அனுபவிக்கவும், தங்களின் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கவும், பொறுப்புடன் அவர்களைச் செயல்பட வைக்கவும் ஏதுவான முறை மக்களாட்சி ஆகும். அரசாங்கம் சில அடிப்படை விதிமுறைகளில் அடிப்படையில் செயல்படுகிறது.

**குடியரசு**

- அரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருத்தல் வேண்டுமே தவிர வாரிசுரிமை அடிப்படையில் அல்ல.

**சமத்துவம்**

- சட்டத்தின் முன் அனைவரும் சமம். பழமையான பாரம்பரிய ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். அரசாங்கமானது அனைவரும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**நீதி**

- குடிமக்களைச் சாதி, மதம் மற்றும் பாலின அடிப்படையில் பாகுபடுத்துவது தவறாகும். சமூக ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும். அரசாங்கம் அனைத்து மக்களின் நலனுக்காகவும், முக்கியமாகப் பின்தங்கிய மக்களின் வாழ்வாரத்திற்கு உழைக்கவும் செயல்படவும் வேண்டும்.

**சகோதரத்துவம்**

- நாம் அனைவரும் ஒரே குடும்பத்தில் வசிக்கும் அங்கத்தினர்கள் போலச் சக மனிதர்களையும் பாவித்து நடத்து கொள்ள வேண்டும். சககுடிமகன் யாரையும் தாழ்வாகப் பாவிக்கக் கூடாது.

**சுதந்திரம்**

- குடிமக்கள் சுதந்திரமாகச் சிந்திக்கவும், எண்ணங்களை வெளிப்படுத்தவும், எண்ணியபடி நடவடிக்கைகளில் ஈடுபடவும் நியாயமற்ற கட்டுப்பாடுகள் கிடையாது.

**ஜனநாயகம் (Democracy)**

- ஆபிரகாம் லிங்கன் கருத்துப்படி ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக அமைக்கப்படும் மக்களின் அரசாகும். இது மக்களால் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் மற்றும் மக்களின் விருப்பங்கள் மற்றும் ஒப்புதலின்படி அரசு செயல்படும் ஒரு ஆட்சி முறையாகும்.
- ஜனநாயக அரசின் பிற இயல்புகளான சட்டத்தின் ஆட்சி குடிமக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான விதிகள், அனைவருக்கும் நீதி மற்றும் சமத்துவத்தில் நம்பிக்கை சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற நீதித்துறை, பத்திரிக்கைச் சுதந்திரம் நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல்கள் போன்றவை.

**மதச்சார்பின்மை (Secularism)**

- இது அரசியலையும், மதத்தையும் தனித்தனியாகப் பிரித்து வைப்பதைக் குறிக்கும். ஒரு மதச்சார்பற்ற நாட்டில் நாட்டுக்கென்று ஒரு மதம் இருக்காது. மேலும் அனைத்துக் குடிமக்களுக்கும் தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு.
- இந்தியாவும் ஒரு மதச்சார்பற்ற நாடாகும். ஆனால் இந்தியாவின் அனைத்து மதங்களும் பாரபட்சமின்றி நடத்தப்படுவதோடு சிறுபான்மை மதங்களின் நலன்களும் காக்கப்படுகின்றன.

**சமூகத்துவம் (Socialism)**

- இது முதலாளித்துவத்திற்கும் தனிநபருக்கும் முக்கியத்துவம் தரும் கொள்கைக்கும் எதிரானதாகும். இது உற்பத்தி மற்றும் வினியோக உரிமைகளை சமூகம் முழுவதிற்கும் பொதுவானதாக மாற்றக் கூடும் தத்துவம் ஆகும்.
- சமத்துவம், அனைவருக்கும் நலவாழ்வு மற்றும் அனைவருக்கும் சமவாய்ப்பு போன்ற இயல்புகளைக் கொண்ட சமூகத்தினை அமைக்க இம்முறை வழிவகுக்கும்.
- சமூகத்துவம் தனது நோக்கத்தை அரசின் மூலம் நிறைவேற்றும். அரசே பொதுநலனின் பிரதிநிதியாகும்.
- இம்முறையில் தனியார் சொத்துரிமைக்கு இடம் இருந்தாலும் அவ்வுரிமை, பொது நலனைக் கருத்தில் கொண்டு சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படும்.

**முகப்புரையின் முக்கியத்துவம்**

1. அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள் எந்நோக்கத்திற்காக அதனை இயற்றினார்கள். அதன் மூலம் அவர்கள் அடைய விரும்பிய அரசியல், சமுதாய, பொருளாதார மாறுதல்கள் யாவை என்பன பற்றிய குறிப்புகளை முகவுரை பகிர்கிறது.
2. அரசியலமைப்பின் உட்பிரிவுகளில் காணப்படும் குழப்பங்களைத் தெளிவுறுத்தவும் சில நேரங்களில் முகப்புரை பயன்படுகிறது.
3. இதன் மூலம் நீதித்துறை அரசியலமைப்பின் மாண்பினைச் சரியான கோணத்தில் விளம்ப இயலும். மேலும் அரசியலமைப்பின் இறையாண்மை அதிகாரத்தின் மூலவர் எவர் என்பதனையும், அரசியலமைப்பு இயற்றப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளினையும் முகப்புரை கொண்டுள்ளது.

**முகப்புரையின் சட்டத்திருத்தம்**

- முகவுரையில் இதுவரை ஒரே ஒருமுறை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 42வது சட்டத்திருத்தம் (1976) மூலம் சமதர்மம், மதச்சார்பற்ற என்ற வார்த்தைகளும், ஒருமைப்பாடு என்ற வார்த்தையும் சேர்க்கப்பட்டது.

## வினாக்கள்

1. இந்திய அரசியலமைப்பின் முகவுரைப் பற்றியும் அதன் முக்கியத்துவத்தை பற்றியும் விவரி.